**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - 2016**

---

தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்கல் செயற்திட்டத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16, டிசெம்பர் 23 மற்றும் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய முறையே பிபீசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் (321), பிபீசீ இலக்கம் (2015) 38 மொத்த இலக்கம் (381), ஜீசீஎல் இலக்கம் (2014) 17 மொத்த இலக்கம் (520) மற்றும் ஜீசீஎல் இலக்கம் (2014) 18 மொத்த இலக்கம் (521) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய மூலவள அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அம்பாந்தோட்டையை சர்வதேச மையமாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையின் வீதி வலையமைப்பை மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான தென்பகுதி அதிவேக வீதியில் 96 கிலோமீற்றர் நீளத்திற்கு விரிவாக்கம் செய்தல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 311,075 மில்லியன் ஆகும். அதில் ரூபா 218,438 மில்லியனுக்கு சமமான 1,708 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி சிவில் வேலைக்கும் கண்காணிப்பு மதியுரை வேலைகளுக்குமென நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதிவேகப் பாதையின் 03 பிரிவுகளது நிர்மாண வேலைகள் 2016 சனவரியில் ஆரம்பமாகின. ஏனைய பிரிவுகளது நிர்மாண வேலைகள் 2016 ஒக்டோபரில் ஆரம்பமாகின. 2019 சனவரியில் நிர்மாண வேலை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்னின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான சீராக்கல்களின் தாக்கத்தைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட மதியுரையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 931 மில்லியன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

செயற்திட்டப் பணிப்பாளராகவோ அல்லது நிறைவேற்று முகவராகவோ 137 ஆம் நிதிப் பிரமாணத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வேண்டிய ரூபா 1,084 மில்லியன் கூட்டுத் தொகையானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சேர்ந்து நின்ற செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2016 டிசெம்பர் 31 வரையான நிதிப் பயன்பாடு என்பன தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வு ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வு ஆண்டின்போது | 2016 டிசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1,708 | 220,042 | 40,626.60 | 31,784.80 | 46,588.70 |
| இலங்கை அரசாங்கம் | 121 | 15,588 | 5,400.00 | 4,535.00 | 11,818.30 |
| ஹட்டன் நஷனல் வங்கி | 63 | 8,181 | - | 1,785.50 | 1,785.50 |
| | 1,892 | 243,811 | 46,026.60 | 38,105.30 | 60,192.50 |

## 3.2 பௌதீக செயல் முன்னேற்றம்

2015 ஏப்ரல் 28 ஆந் திகதியன்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்பக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம், 04 ஒழுங்கைகளுடனான தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்கலுக்கான நிர்மாண வேலைகளது பொருளாதார உள்ளக பயன்தரு வீதம் எதிர்மறையான 11.10 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், 04 ஒழுங்கைகளுடனான அதிவேகப் பாதையினது நிர்மாண வேலைகள் 04 பிரிவுகளாக்கப்பட்டிருந்தன. அவை மாத்தறையிலிருந்து பெல் அத்தவரை, பெலி அத்தவிலிருந்து வெடியவரை, வெடியவிலிருந்து அந்தரவெவ வரை மற்றும் அந்தரவெவயின் ஊடாக மத்தலவிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலானவை ஆகும். அவை 2014 ஆம் ஆண்டில் கேட்டுப் பெறாத ஒப்பந்தப் பொதிகளின் வாயிலாக 03 வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. கிடைத்த தகவல்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேகப் பாதையின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தன. மேற்கொண்டும் அவதானிக்கப்பட்டவை பின்வருமாறு.

(அ) பொதுவாகவே ஒப்பந்தத்தின் வேலைப் பரப்பெல்லை அடிக்கடி மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. ஆகவே, ஆரம்ப வடிவமைப்பில் முன்மொழியப்பட்டவற்றிற்குப் பதிலாக மாத்தறையிலிருந்து பெலி அத்தவிற்கு 6.50 கிலோ மீட்டர் முதல் 10.30 கிலோ மீட்டர் வரை வயாடக்ட் பாலங்கள் உட்புகுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அதனால் ஏற்படும் கிரய அதிகரிப்புப் பாதிப்பை அளவீடு செய்து அதனைச் செயற்திட்டம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) அதிவேகப் பாதையின் மாத்தறை முதல் பெலி அத்த வரையிலான பிரிவினது நிர்மாண வேலைத்தளக் கண்காணிப்புப் பணி 2014 செப்டம்பரில் அரச கூட்டுத்தாபனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டு 2015 செப்டெம்பரில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டம் என அழைக்கப்படும் நன்கொடைச் செயற்திட்டம் ஒன்றினது சேமிப்பாகிய ரூபா 24.84 மில்லியன் இதற்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2016 சனவரி 19 ஆந் திகதியன்றே சில நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மதியுரையாளர்களின் வழிகாட்டல் பெறப்படாதும் மதியுரையாளர் மேற்கொண்ட நிர்மாண வேலைக் களப் பரிசோதனையுமின்றி இது நடைபெற்றுள்ளமை இதன் மூலம் உறுதியானது.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 226 ஆகும். ஒரு செயற்திட்டக் கணக்காளர், 13 செயற்திட்டப் பொறியியலாளர்கள், 36 முகாமைத்துவ உதவியாளர்கள் என்போர் அதில் உள்ளடங்குவர். எவ்வாறாயினும், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மேலதிகமாக 04 செயற்திட்டக் கணக்காளர்களும் 13 செயற்திட்டம் பொறியியலாளர்களும் 36 முகாமைத்துவ உதவியாளர்களும் செயற்திட்டக் கண்காணிப்புக் கூறால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

மேலும், அவதானிக்கப்பட்டவை பின்வருமாறு.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்வு மதியுரையாளர்கள் பணியிலமர்த்தப்பட்டு ரூபா 386.67 மில்லியன் கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், மத்தல முதல் அம்பாந்தோட்டை வரையிலான அதிவேகப் பாதைக் காணியை அளவிடும் முதல் கட்டத்தில் அங்கிருந்த 40 மீட்டர் நீளமும் 23 மீட்டர் ஆழமும் உடைய கற்குழி ஒன்று 8 + 250 கிலோ மீட்டர் முதல் 8 + 500 கிலோ மீட்டர் வரை இருந்தமை இனங்காணப்படாது போயிருந்தது. அதனையடுத்து, கற்குழியை ரூபா 380.66 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அடைப்பதற்குச் செயற்திட்டம் தீர்மானித்திருந்தது.

(ஆ) மாத்தறை முதல் பெலி அத்த வரையிலான பிரிவில் 41,970 மீட்டர் நீளத்தில் கிரவல் இறுக்கமடையச் செய்யும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும், அது தோல்வியுற்றதைத் தெரிவிக்கும் அறிக்கை இருந்தபோதும் ஒப்பந்தகாரருக்கு ரூபா 266.61 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஒப்பந்தத்தின் 4.2 ஆம் பொது நிபந்தனைக்கு முரணாக செயலாற்றல் பிணை முறியை ரூபா 128.42 மில்லியன் செலவில் பெறுவதும் செயற்திட்டத்தாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் 103(2) ஆம் இலக்க பிரமாணக் குறிப்பின்படி, ஒப்பந்தத் தேவைகளுக்கு மீள ஏற்றுமதி செய்யப்படும் இயந்திர சாதனங்களையும் உபகரணங்களையும் மீள ஏற்றுமதி செய்வதற்கு ஒப்பந்தகாரர்களால் இயலும். எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர்களால் மீள ஏற்றுமதி செய்வதற்கு எண்ணியுள்ள இயந்திர சாதனங்களையும் உபகரணங்களையும் இனங்காண்பதற்காக வழிவகைகள் அறிமுகம் செய்யப்படவில்லை.

### 3.5 காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 2014 மே 21 ஆந் திகதி ஆரம்பமாகின. 2014 நவம்பர் 19 ஆந் திகதி அவை முடிவடையவிருந்தன. எவ்வாறாயினும், தெற்கு அதிவேகப் பாதைக்கென குறித்த பிரிவுகளால் சுவீகரிக்கப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பான ஆவணங்கள் எதுவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் காணிச் சுவீகரிப்புப் பிரிவினால் பேணப்படவில்லை.

### 3.6 நிதிசார் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள்

செயற்திட்டமானது 454 ஆம் 751 ஆம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பேண வேண்டிய நிலையான சொத்துப் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை.